House, will the Minister assure this House that the State Government will take up this issue with the Central Government and, even if no aid is forthcoming from the Centre, the State Government will take it up and run this industry as its own concern, if other conditions are found satisfactory ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : "வெர்மிகுலைட்" தொழிற்சாலையை உருவாக்கி அதனால் போதுமான அளவுக்கு லாபம் கிடைக்கக் கூடிய தன்மை இருக்குமானால் அரசாங்கமே அதை ஏற்று நடத்துவதற்கு வாய்ப்பு ஏற்படுமானால் அதைப் பற்றி கவனிக்கப்படும். அதனால் அதிக லாபம் வராது என்கின்ற நிலையில்தான் மற்றவர்களிடம் ஒப்படைக்கின்ற நிலைமை வருமே தவிர, அது இல்லாதவரை, எளிதாக லாபம் தரக்கூடியதாக இருக்குமானால், அதை அரசாங்கமே ஏற்று நடத்துவதற்கு முயலும்.

Thiru K. S. KOTHANDARAMIAH : Sir, if we read the District Gazetteers and District Manuals written by the European Officers during the British administration, we find that may minerals are available in different parts of this State. On this account will the Government arrange for a geological survey of the entire State ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மத்திய அரசாங்கத்தினுடைய புவியியல் துறையினரும், மாநில அரசாங்கத்தினுடைய புவியியல் துறையினரும் பல்வேறு வகையான திட்டங்களை ஆங்காங்கு ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் இப்பொழுது கிடைக்கின்ற கனிப்பொருள்களுடைய நிலைமைகள், இனி கிடைக்கக்கூடியவை என்ன என்பதைப் பற்றியும் ஆராய்ந்து, அதன் மூலம் இப்பொழுது ஏற்படுத்தப்பட்டிருக்கிற தொழிற்சாலைகள் யாவை, இனி என்னென்ன தொழிற்சாலைகள் ஏற்படுத்தக்கூடும் என்பதைப்பற்றியும் விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. இந்த நிலைமைகளையெல்லாம் ஆராய்ந்து பிறகு தான் இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் இருக்கிற நிலைமைகளை வெளியாக்கலாம்.

திரு. ஜெ. பெள்ளி கௌடர் : நீலகிரி மாவட்டத்தில் சில இடங்களில் தங்கம் இருப்பதாக அறிகிறோம். அதை வெட்டி எடுக்கக் கூடிய வகையில் சர்க்காருக்கு ஏதேனும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இது "வெர்மிகுலைட்" பற்றிய கேள்வி. நீலகிரியில் தங்கம் இருப்பதாகக் கூறப்படுகிறது. அது பற்றி தனிக்கேள்வி கேட்டால், விவரம் கொடுக்கக் கூடும்.

*104 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன்** : மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா— மு. ப 9-30

(அ) தென்னார்க்காடு ஜில்லா, மாமண்டூர் அருகில் தாமிரம், காரீயம், துத்தநாக படிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டனவா ?

(இ) இவைகளை எடுப்பதற்காக சர்க்கார், மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

(உ) இவ்வேலை தனியார் துறையில் எவருக்கேனும் விடப்பட்டுள்ளதா?

(எ) இதுவரை பரீட்சார்த்தமாக ஆராய்ந்து பார்க்கப்பட்டதில் கண்டுபிடிக்கப்பட்ட விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) and (இ) ஆம். அப்பகுதியில் புவியியல்-இரசாயன ஆராய்ச்சியை மும்முரமாகப் மேற்கொள்ளவும், குழிகள் தோண்டவும், கனிப்பொருள்களைப்

பகுத்தாராய்ந்து தரங்களை மதிப்பிடுவதற்கென அவற்றின் மாதிரிகளைச் சேகரிக்க சுரங்க வாயிற்குழி ஒன்றை அமைக்கவும், தயாரித்துள்ள திட்டத்திற்கு அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

(உ) இல்லை.

(எ) மேற்கொள்ளப்பட்ட சர்வே மூலம் சுமார் 10 இலட்சம் டன் கனிப்பொருள் கிடைக்கக் கூடுமென்றும், அதில் தாமிரம், ஈயம், துத்தநாகம் ஆகியவை முறையே சராசரி 0·63, 2·00, 2·73 சதவீதம் இருக்கக் கூடும் என்றும் தெரிகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இது போன்ற கனி வளங்கள் தென்னார்க்காடு மாவட்டத்தில் மட்டுமல்ல, இன்னும் தமிழகத்தில் பல இடங்களில் இருப்பதாகத் தெரிகிறது. அவற்றைத் தனியார் துறையில் விடவில்லை என்றாலும், பொதுத் துறையில் ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தென்னார்க்காடு மாவட்டத்தில் மாமண்டூர் அருகில் தாமிர, துத்தநாக, காரியப் படிவங்கள் இருப்பதாகத் தெரிந்து அவற்றைத் தோண்டி எடுக்க அரசாங்கம் முயற்சியை மேற்கொண்டிருக்கிறது. அந்தத் திட்டத்திற்கு இதிலிருந்து வரும் பொருள்கள் எந்த அளவிற்குக் கிடைக்கிறது, எந்த அளவிற்கு பயன் படுத்தப் படுகிறது என்று வரும்போது தான் கனம் அங்கத்தினர் கூறும் கருத்துக்களை ஆராயப்படும்.

திரு. ரா. ரா. முனுசாமி : தென்னார்க்காடு மாவட்டத்தில் செஞ்சி பகுதியில் உள்ள கிராமத்தில் காரீயம் இருப்பதாகத் தகவல் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தக் கேள்வி மாமண்டூர் பற்றியது. செஞ்சி பற்றி தனிக் கேள்வி போட்டால், சொல்லலாம்.

Dr. H. V. HANDE : Sir, when do the Government propose to start the work of excavating minerals and what is the exact amount of expenditure that is envisaged by this Government ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்த திட்டத்திற்கு எவ்வளவு செலவாகும் என்று குறிப்பு இல்லை. சர்வேயில் 10 லட்சம் டன் கனிப்பொருள் கிடைக்கலாம் என்று தெரிகிறது. அது சம்பந்தமாக கனிப்பொருள்களை எடுத்து ஆராய அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

Mineral Survey

* 105 *Q.*—**Thiru K. VINAYAKAM :** Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether there is any proposal to start or carry on geological survey of Tiruttani taluk, Chingleput district, with a view to find out the mineral potentialities of the place ?

மாண்புமிகு திரு: இரா. நெடுஞ்செழியன் : ஆம். 1967–68-ம் ஆண்டில் திருத்தணி தாலூகாவில் முறையான கனிவள ஆராய்ச்சியை மேற்கொள்ள மாநில புவியியல் ஆராய்ச்சிக் கிளை கருதியுள்ளது.

திரு. கே. விநாயகம் : தலைவர் அவர்களே, எப்படி இப்பொழுது நெய்வேலியில் அதிகமான பழுப்பு நிலக்கரி கிடைக்கிறதோ, அதைப்பற்றி 50, 60 ஆண்டுகளுக்கு முன்பே வள்ளலார் தன் பாட்டுகளில் இதுபற்றிக் குறிப்பிட்டு இருக்கிறார்களோ, அதே போல திருத்தணி தல புராணத்திலும் கச்சியப்ப புலவர் தன் பாட்டுகளில் தெய்வயானை திருக்கல்யாணத்திற்கு பொன்னும், வெள்ளியும், நவரத்தினங்களும் கொண்டு வந்ததாகவும், அவற்றை மலைக்கு அடியில் புதைத்து வைத்துவிட்டதாகவும்